தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு

# அவசரகதியில் நடைபெறுகிறது எஸ்.ஐ.ஆர்!

## நாடாளுமன்றத்தில் தயாநிதி மாறன் உரை!



புதுடெல்லி, டிச.10–

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் நேற்று, எஸ்.ஐ.ஆர். எனப்படும் வாக்காளர் சிறப்பு திருத்தம் தொடர்பாக விவாதம் நடைபெற்றது. அப்போது, கழக உறுப்பினர் தயாநிதி மாறன் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் எஸ்.ஐ.ஆர் –க்கு எதிராக உரையாற்றினார்.

இது குறித்து அவர் பேசியதாவது: –

நடுநிலை தேவை. குறிப்பாக. நம்மை தேர்ந்தெடுக்கின்ற. நாடாளுமன்றத்தை தேர்ந்தெடுக்கின்ற, சட்டமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க நடத்தப்படுகின்ற தேர்தல்கள். நடுநிலையுடன் நடத்தப்பட வேண்டும். அதுதான் தேர்தல் ஆணையத்தின் வேலை. ஆனால், பா.ஜ.க ஆட்சி என்றைக்கு வந்ததோ அன்றுமுதல் தேர்தல் ஆணையம் மீதுள்ள நம்பிக்கை மக்களிடம் குறைந்துவிட்டது. மக்களிடம் மட்டுமல்ல அரசியல்வாதிகளிடமும் தேர்தல் ஆணையம் மீது சந்தேகம் வந்துவிட்டது. இதற்கு உதாரணமாக ஒன்றை சொல்கிறேன்.

2014ஆம் ஆண்டு தேர்தலில் பாஜக ஆட்சிக்கு வந்தது. அப்போது தமிழ்நாட்டில் அதிமுகவுடன் மறைமுக கூட்டணி வைத்தது பாஜக. அப்போது இருந்த அம்மையார். தான் துணை பிரதமராக வரவேண்டும் என்பதற்காக பணப்பட்டுவாடா செய்தார். இதை எதிர்த்து தேர்தல் ஆணையத்திடம் புகார் கொடுத்தோம். அப்போது அதை தடுக்காத தேர்தல் ஆணையம், 144 தடை உத்தரவு மட்டும் போட்டு பணம் கொடுப்பதை மறைமுகமாக ஆதரித்தது. அப்போது திமுக கூட்டணியிலிருந்து ஒரு வேட்பாளர்கூட மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதுபற்றி ஏற்கனவே இந்த அவையில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

**பிரதமரின் தியானம்!**

அதுமட்டுமில்லை. தேர்தல் நியாயமாக நடைபெறுகிறதாம்! எங்கே? 2019 தேர்தலில் பல கட்டங்களாக வாக்குப்பதிவு நடந்தது. இறுதிக் கட்ட வாக்குப்பதிவில் முந்தைய இரண்டு நாட்களுக்கு எந்த பிரச்சாரமும் செய்யக்கூடாது. அமைதி காத்திடவேண்டும். ஆனால் பிரதமர் மோடிக்கு மட்டும் கேதார்நாத் சென்று தியானம் செய்ய தேர்தல் ஆணையம் சிறப்பு அனுமதி அளிக்கிறது. அதற்கு பிரதமர் மோடியும் நன்றி சொன்னார். எதற்காக அந்த நன்றி என்றால் அந்த இரண்டு நாட்களும் இந்திய தொலைக் காட்சிகள் அனைத்திலும் பிரதமர் முகமே வந்துகொண்டிருந்தது. பிரச்சாரம் செய்யக்கூடாது என்று சொல்லிவிட்டு மறைமுகமாக பிரச்சாரம் செய்ய ஊக்குவித்தது தேர்தல் ஆணையம் தான். கேதார்நாத் தியானத்தை முடித்துக்கொண்டு, 2024ஆம் ஆண்டு தேர்தலின்போது தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் மோடி , கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் சிலையில் அமர்ந்து இரண்டு நாட்கள் தியானம் செய்தார். அப்போதும் இரண்டு நாட்களுக்கு தொலைக் காட்சியில் அவர் முகம்தான் வந்தது. இதுதான் தேர்தல் ஆணையத்தின் நியாயமா?

ஒவ்வொரு முறையும் தேர்தல் நடக்கும்போது பணப் பட்டுவாடா நடப்பதாக மற்ற கட்சிகளை குறிவைத்து பணப் பறிமுதல் செய்யும் தேர்தல் ஆணையம், பாஜக மற்றும் அதன் கூட்டணி வேட்பாளர்களை கண்டுகொள்வதேயில்லை. தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கு நாங்களும் துணை நிற்கிறோம். ஆனால் உண்மையான வாக்காளர்கள் பட்டியலில் திருத்தம் வேண்டும். இரண்டு இடங்களில் பதிவாகியிருக்கும் வாக்காளர் பெயர் வேண்டாம். இறந்தவர்களின் பெயர்களை நீக்குங்கள். இதில் எங்களுக்கு எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தமிழ்நாட்டுக்கு வந்து ஒரு தொகுதியில் 7 ஆயிரம் வாக்குகள் போலி வாக்குகள் உள்ளன என்று சொல்கிறார். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழலாமா? உங்களுக்கு ஏன் அந்த அக்கறை? நீங்களும் தேர்தல் ஆணையமும் தெரிந்துதானே வேலை செய்கிறீர்கள். இத்தனை ஆண்டுகளாக கும்பகர்ணனை போல தூங்கிக்கொண்டு இருந்த தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்தை மூன்று மாதங்களில் செய்து முடிக்க நினைப்பது ஏன்? ஆறு மாத காலம் எடுத்துக்கொண்டால் என்ன? அவசரம் காட்டுவதன் காரணம் என்ன?

இதை பார்க்கும்போது எங்களுக்கு அச்சம் வருகிறது. அது என்னவென்றால்... 2016ஆம் ஆண்டு நவம்பர் 8ந்தேதி தொலைக்காட்சியில் தோன்றிய பிரதமர் மோடி , இனி ரூ.1000, ரூ.500 நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தார். அதேபோல்தான் கடந்த நவம்பர் 4-ஆம் தேதி வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரை புதிதாக பதிவு செய்தால் மட்டுமே வாக்களிக்கும் உரிமை உண்டு என்றார். இப்படி வாக்குரிமையை இரவோடு இரவாக பிடுங்கிக்கொண்டால் எங்களுக்கு அச்சம் வராதா? இது போன்ற சிந்தனையெல்லாம் பிரதமர் மோடிக்கு மட்டும்தான் வரும். இதனால் எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர்.. எஸ்.ஐ.ஆர் பணியில் ஈடுபட்ட பணியாளர்களில் 29 நாட்களில் 47 பேர் உயிரிழந்துள்ளனர். நீங்கள் எடுத்த ஒவ்வொரு முடிவுகளால் ஏழை மக்கள் தானே உயிரிழக்கின்றனர்?

**மக்கள் மீது தேவையற்ற சுமை!**

தேர்தல் ஆணையம் நியாயமாக நடக்கவேண்டும் என்று நினைத்தால் முதலில் சில தொகுதிகளிலோ அல்லது ஒரு மாநிலத்திலோ செயல்படுத்தி அதில் வெற்றியாகும் நிலையில் பிற மாநிலங்களில் அதனை நடைமுறைப்படுத்தலாம். பீகார் தேர்தலில்போது எத்தனை லட்சம் போலி வாக்காளர்கள் இருந்தார்கள்? அதை சரி செய்தீர்களா? மணலை கயிறாக திரிப்போம் என்று சொன்னீர்களே என்ன வாயிற்று? தன் கடமையிலிருந்து தவறிய தேர்தல் ஆணையம் மக்கள் மீது தேவையற்ற சுமையை ஏற்றுகிறது.

திருமணம் செய்துகொள்ள, விவாகரத்து செய்ய, வாகனம் ஓட்ட, கல்லூரியில் படிக்க, வங்கியில் கணக்கு துவங்க, அரசு வேலைக்குச் செல்ல எல்லாவற்றுக்கும் மேலாக இறந்தால்கூட பிணத்தை அடக்கம் செய்ய என்று எல்லாவற்றுக்கும் ஆதார் தேவைப்படும்போது தேர்தல் ஆணையம் ஆதாரை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றது. எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து உச்சநீதிமன்றம் மூலம் ஆதாரை கொண்டு வந்தோம். ஆதாரை இணைத்தால் மக்கள் கணக்கெடுப்புக் கூட தேவையில்லை. ஆனால் எதற்காக பாஜக அரசு பயப்படுகிறது? அதனால்தான் எங்களுக்கு அச்சம் எழுகின்றது! உங்கள் உள் நோக்கம் திருட்டு வழியிலே ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்பதுதான்.

ஒரு மாநிலத்தில் தேர்தல் வருகிறது என்றால் 6 மாதங்களுக்கு முன்பு அங்கு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வந்துவிடுவார். வருவாய் துறை, சிபிஐ வருகிறது என மிரட்ட ஆரம்பித்துவிடுவார். இதற்கு ஒரு டீமே வைத்திருக்கிறார்கள். இதை கண்டுகொள்ளாத, கண்டிக்காத தேர்தல் ஆணையம், மக்களை புண்படுத்தும் வேலையை செய்கிறது.

எங்கள் தமிழ்நாடு அமைதிப்பூங்கா. அதைக் கெடுக்க என்னென்னவோ செய்து பார்க்கிறார்கள். அயோத்தியில் செய்த வேலையை திருப்பரங்குன்றத்தில் செய்யப் பார்க்கிறார்கள். திராவிட முதல்வர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கும்வரை உங்கள் பாச்சா பலிக்காது. உங்களை ஒருபோதும்உள்ளேவரவிடமாட்டோம்!

அய்யா! எங்களுக்கோர் பெரிய அச்சம் இருக்கிறது! தேர்தல் ஆணையம் என்ன சொல்கிறது? மூன்று கட்டங்களாக வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமையை திருப்பி பெறலாம் என்கிறது. அதாவது..1987 ஜூலை மாதத்திற்கு முன்பு பிறந்திருந்தால் இரண்டு ஆவணங்களில் ஏதாவது ஒன்றையும் 1987 ஜூலை முதல் 2004ஆம் ஆண்டுக்குள் பிறந்தவர்கள் மூன்று ஆவணங்களில் ஏதாவது ஒன்றையும் 2004 ஆம் ஆண்டுக்கு பிறகு பிறந்தவர்கள் வாக்குரிமையை திரும்பப் பெற 13 ஆவணங்களில் ஏதாவது ஒன்றையும் தரலாம் என்று சொல்கிறது. அதில் 13வது ஆவணமாக குறிப்பிட்டுள்ளதில், “பீகார் வாக்காளர் திருத்த பட்டியலில் பெயர் முறையாக சேர்க்கப்பட்டிருப்பவர்கள் எந்த மாநில தேர்தலிலும் வாக்களிக்கலாம்” என்று உள்ளது. இது என்ன நியாயம் ?.

**பின் வாசல் வழியாக**

பீகார் தேர்தல் நடந்து ஒரு மாதம்கூட ஆகவில்லை. தமிழ்நாட்டில் வருகிற ஏப்ரல் மாதம் தேர்தல் நடக்கவுள்ளது. அப்படி இருக்கும்போது பீகாரில் வாக்களித்தவர் தமிழ்நாட்டில் வாக்களிக்கலாமா? வந்தாரை வாழ வைக்கும் தமிழகத்திற்கு வந்த சோதனை இது. ஒருகோடி பீகார் மக்கள் எங்கள் தமிழ்நாட்டில் நல்ல முறையிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் பாஜக ஆளும் எந்த மாநிலத்திலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. அவர்களுக்கு வேறெங்கும் நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர்கள் வாழ்வாதாரம் நல்ல முறையில் முன்னேற வேண்டும் என்று அவர்கள் எங்கள் திராவிட மாடல் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள். அந்த ஒருகோடி வாக்குகள் தமிழ்நாட்டு தேர்தலில் சேர்க்கப்படும் என்றால் எங்களுக்கு அச்சம் வராதா? பின்னர் எதற்கு தேர்தல் ஆணையம்? நீங்கள் நியாயமாக நடந்துகொள்கிறீர்களா? இல்லை மறைமுகமாக பாஜக-விற்கு வேலைசெய்கிறீர்களா? ஒருகோடி பேரை எதற்காக பீகாரிலும் வாக்களிக்கலாம், அதே வாக்குச்சீட்டை எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டிலும் வாக்களிக்கலாம் என்றால் உங்கள் உள்நோக்கம் வெளிப்படையாக தெரிகிறது. நீங்கள் என்னதான் பின்வாசல்வழியில் தமிழ்நாட்டை கைப்பற்ற நினைத்தாலும், தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் உங்களை விடமாட்டார்கள்

வளர்ந்த நாடுகள் யாருமே பயன்படுத்தாத ஒரு தொழில்நுட்பத்தை வைத்து நிலவுக்கு செயற்கைகோளை அனுப்பியதற்காக இந்தியாவை உலகமே பாராட்டியது. அப்போது இஸ்ரோவில் பணியாற்றியவர்கள் பகுத்தறிவு மாநிலத்திலிருந்து வந்தவர்கள். ஆனால் மின்னணு வாக்கு இயந்திரத்தை பார்த்தாலே எங்களுக்கு அச்சமாகவுள்ளது. அதன் உரிமையாளர் யார்? அதற்குள் என்ன இருக்கிறது என்று யாருக்குமே தெரியாது. யாருக்கு ஓட்டு போட்டாலும் பாஜகவுக்குதான் விழுகிறது என்கிறார்கள். அமெரிக்காவில், ஜப்பானில், ஜெர்மனி போன்ற வளர்ந்த நாடுகளில் கூட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் இல்லாதபோது நீங்கள் மட்டும் ஏன் அதை தலையில் வைத்துக்கொண்டு ஆடுகிறீர்கள்? வாக்குச் சீட்டை பார்த்து நீங்கள் அச்சப்படுவதை பார்த்தால் நீங்கள் ஏதோ தவறு செய்கிறீர்கள் என்று எங்களுக்கு சந்தேகம் வரத்தானே செய்யும்?

**எஸ்.ஐ.ஆரே தேவையில்லை!**

வாக்குப்பதிவு முறையில் தயவு செய்து நீங்கள் வளர்ந்த நாடுகளை பின்பற்றுங்கள். எங்களுக்கு தேவை நியாயமான தேர்தல்; நியாயமான தேர்தல் ஆணையம். அனைத்து துறைகளிலும் ஆர்.எஸ்.எஸ் ஆட்கள் தான் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும்போது நடுநிலையுடன் இருக்கவேண்டிய அரசு துறைகள் நடுநிலையுடன் நடக்குமா? தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை சீர் செய்ய நினைக்கிறது. ஆனால் தேர்தல் ஆணையம் எப்போது சீர் செய்யப்படப்போகிறது? இது என்னுடைய கேள்வி மட்டுமில்லை; இந்திய மக்களின் கேள்வியும் இதுதான். நியாயன முறையில் தேர்தல் நடக்க அவசரகதி வேண்டாம்.

தயவு செய்து எஸ்.ஐ.ஆரை நிறுத்துங்கள். எஸ். ஐ.ஆரே தேவையில்லை. அனைத்து குளறுபடிகளையும் சரிசெய்து விட்டு 6 மாதங்கள் அவகாசம் எடுத்து நல்ல முறையில் சீர்திருத்தங்களை நடத்துங்கள்.

பாவம், இந்தி பேசும் மக்களை பாஜக ஏமாற்றலாம். ஆனால் தமிழ்நாடு மக்களை நீங்கள் ஏமாற்ற முடியாது, திராவிட மக்கள் ஒருபோதும் ஏமாறவும் மாட்டார்கள்!

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. குறிப்பிட்டார்.

---

பவானி நகரக் கழகச் செயலாளர்

## ப.சீ.நாகராசன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.10–

**பவானி நகரக் கழகச் செயலாளர் ப.சி.நாகராசன் மறைவுக்கு, கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–**

பவானி நகரக் கழகச் செயலாளர் ப.சீ. நாகராசன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

நாகராசன் அவர்கள் ஈரோடு மாவட்டக் கழகத்தினரின் அன்பையும் அபரிமிதமான மரியாதையையும் பெற்றிருந்த ஒப்பற்ற செயல்வீரர் ஆவார். கடந்த மாதம் நான் ஈரோடு மாவட்டத்துக்கு அரசு நலத்திட்ட விழாவில் பங்கேற்கச் சென்றிருந்தபோதும் மிகச் சிறப்பான வரவேற்பினை வழங்கியிருந்தார். நிகழ்ச்சிகளைப் பாங்குடன் ஒருங்கிணைப்பதில் ஆர்வத்துடன் செயல்படும் தளகர்த்தராகத் திகழ்ந்தவர் நாகராசன் அவர்கள்.

கால்நூற்றாண்டு காலம் பவானி நகரக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய நாகராசன் அவர்களுக்குச், சிறந்த நகரக் கழகச் செயலாளர் என்று விருது வழங்கியிருந்ததையும் நெகிழ்ச்சியோடு இவ்வேளையில் நினைவு கூர்கிறேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற காணொளி காட்சி வாயிலான மாவட்டச் செயலாளர்கள் சிறப்பு கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் தொகுதி பொறுப்பாளர்கள் டாக்டர் திலீப் ராஜ கண்ணப்பன், சுப.த.சம்பத், ஆனந்த், விஜய கதிரவன் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் செயலாளர்கள் பங்கேற்றனர்.

---

இன்று (டிச.10)

# மூதறிஞர் இராஜாஜி 147-வது பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு – அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்!

சென்னை, டிச. 10 –

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சார்பில், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் 147வது பிறந்த நாளான இன்று (10.12.2025) காலை 9.30 மணியளவில் அமைச்சர் பெருமக்கள், சென்னை பாரிமுனை, உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூருக்கு அருகிலுள்ள தொரப்பள்ளி கிராமத்தில், 10.12.1878 ஆம் ஆண்டு பிறந்தார். சட்டப் படிப்பை முடித்து வழக்கறிஞராகப் பணியாற்றி, பின், சேலம் நகராட்சி மன்றத் தலைவராக விளங்கினார். அப்பொழுது ஊதியமே வாங்காமல், தம் மக்கள் பணியைத் தொடர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணல் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டு, தமிழ்நாட்டில் நடந்த உப்பு சத்தியாகிரகம் போராட்டத்தினை முன்னின்று நடத்தினார். இதனைத் தொடர்ந்து, 1937ஆம் ஆண்டு காங்கிரஸ் இயக்கத்தின் சார்பில் வெற்றி பெற்று, அன்றைய மதராஸ் மாகாணத்தின் முதலமைச்சரானார். தம் வாழ்நாளின் இறுதிவரையில் மதச்சார்பின்மையைக் கடைப்பிடித்தார். தமிழ்நாடு முதலமைச்சர், இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல், மேற்கு வங்க ஆளுநர், ஒன்றிய உள்துறை அமைச்சர் என நாட்டின் மிக உயர்ந்த பதவிகளை வகித்துள்ளார்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் மதுவிலக்குத் திட்டத்தினைச் செயல்படுத்தி, அதனால், அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்கின்ற வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக விற்பனை வரி வசூலிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். ஒடுக்கப்பட்ட மக்களின் ஆலய நுழைவுக்கு உதவினார். விவசாயிகளின் கடன் சுமையைக் குறைத்திடும் வகையில் சட்டம் கொண்டு வந்தார். தீண்டாமை ஒழிப்பில் தீவிர கவனம் செலுத்தினார். கலப்புத் திருமணத்தினைத் தன் இல்லத்திலேயே நடைமுறைப்படுத்தினார்.

முதிர்ந்த அரசியல் ஞானமும், ஆழ்ந்த அனுபவமும் கொண்டிருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நேர்மையும், எளிமையும் மக்களிடம் சிறப்பான வரவேற்பைப் பெற்றவை.

இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்று, அரசு மாளிகையை விட்டு வெளியேறிய பொழுது, தமக்கு அளிக்கப்பட்ட பரிசுப் பொருள்கள் அனைத்தையும் முறையாக அரசிடம் ஒப்படைத்துவிட்டுத் தமது கைத்தடியுடன் வெளியேறினார். விடுதலைப் போராட்டத்திலும், அரசு நிருவாகத்திலும் தமது அளப்பரிய பணிகளை ஆற்றிய போதிலும், இலக்கியத்தில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தின் காரணமாக அரிய பல நூல்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய பல நூல்களில் ‘சக்கரவர்த்தித் திருமகன்’, ’வியாசர் விருது’ ஆகிய நூல்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை. ‘சக்கரவர்த்தித் திருமகன்’ என்ற நூலுக்காக அவருக்கு 1958ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 1954 ஆம் ஆண்டு இந்தியத் திருநாட்டின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். கிருஷ்ணகிரி மாவட்டம் தொரப்பள்ளியில் அவர் வாழ்ந்த வீடு அரசின் சார்பில் அரசுடைமையாக்கப்பட்டு நினைவில்லமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாகிரகம் முதலான சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்று, பலமுறை சிறை சென்ற மகத்தான தியாகி என்பதால் அவருக்குச் சுதந்திரப் போராட்ட வெள்ளி விழாவின் போது, ஒன்றிய அரசு வழங்கிய தாமிரப் பட்டய விருதினை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 3.10.1972 அன்று இராஜாஜி அவர்களின் இல்லம் சென்று அவருக்கு மலர்மாலை அணிவித்து வழங்கினார்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள், 25.12.1972 அன்று மறைந்தார். அவருடைய நினைவாக, 1973 டிசம்பர் 25 அன்று சிறப்பு அஞ்சல்தலை வெளியிடப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில், மூதறிஞர் அவர்களைப் போற்றும் வகையில் அவர் விரும்பும் கிரீடம் போலவே அவருடைய சிலையுடன் கூடிய நினைவாலயத்தை வடிவமைத்துக் கட்டி, விடுதலைப் போராட்ட தியாகி ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களைக் கொண்டு, 5.5.1975 அன்று திறந்து வைத்தார்கள்.

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில், 24.12.1978 அன்று அவருக்குச் சிலை நிறுவித் திறந்து வைக்கப்பட்டது. அவருடைய நினைவைப் போற்றுகின்ற வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் அவருடைய பிறந்த நாளான டிசம்பர் 10 ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த ஆண்டு டிசம்பர் 10ஆம் நாளன்று அமைச்சர் பெருமக்கள், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர். இந்நிகழ்ச்சியில், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி பிரநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

---

அண்ணா அறிவாலயம் ஊழியர்

## தா. முரளிதரன் இளைய சகோதரர் தா.நாகேஸ்வரன் மறைவு!

### சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. – கழக முன்னணியினர் அஞ்சலி!

*சென்னை,டிச.10-*

*தி.மு.க. தலைமை அலுவலகம் அண்ணா அறிவாலயத்தில் பணிபுரியும் தா. முரளிதரன் அவர்களின் இளைய சகோதரர் தா. நாகேஸ்வரன் (வயது 61) அவர்கள் உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (09.12.2025) அதிகாலை 1.30 மணியளவில் மறைவெய்தினார்என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*



*நாகேஸ்வரன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்து தீவிர கழகப்பணி மேற்கொண்டவர். காஞ்சிபுரம் மாநகர் 34 வார்டில் கழகம் வளர்த்தவர்களில் முக்கியபங்காற்றியவர் ஆவார். காஞ்சிபுரம் முருகேசன் அவர்கள் காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்ட போது அவரது வெற்றிக்காக தீவிர பணியாற்றியவர். அதே போன்று காஞ்சிபுரம் சட்டமன்றம்,நாடாளுமன்றத் தேர்தல்களில் கழகத்தின் வெற்றிக்காக அயராது பணியாற்றியவர்.*

*முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பால் மிகுந்த பற்று கொண்டவர் ஆவார்.*

*மேலும் காஞ்சிபுரம் கழக முன்னணி தலைவர்களுடன் நெருக்கமான தொடர்புடையவர். கழகம் அறிவிக்கும் அனைத்து போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டுள்ளார். சட்டமன்றம், நாடாளுமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் கழகம் அறிவிக்கும் வேட்பாளர்களின் வெற்றிக்காக தீவிரமாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

*அப்பேற்பட்ட கழக செயல்வீரர் நாகேஸ்வரன் அவர்கள் உடல் நலம் குன்றி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (9.12.2025 - செவ்வாய்க்கிழமை) விடியற் காலை 1.30 மணியளவில் மறைவுற்றார்.*

*இவர் மறைவுச் இச்செய்தி அறிந்தவுடன், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம். பி. எழிலரசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுகுமார், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வி.எஸ். ராமகிருஷ்ணன், மாநில தொண்டர் அணித் தலைவர் ஜி. சுகுமார், மாநகரச் செயலாளர் தமிழ்ச் செல்வன், மாநகர அவைத் தலைவர் கே.ஏ. செங்குட்டுவன், மாநகர் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதிச் செயலாளர்கள் எஸ். சந்துரு, கே. திலகர், அ. தசரதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், சன்பிராண்ட் ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர் சுரேஷ், 34வது வட்டச் செயலாளர் ஸ்ரீபால், 24வது வட்டச் செயலாளர் சங்கர், இளைஞர் அணி அருண் , மற்றும் சுரேஷ், கருணாநிதி, குட்டி , ஞானசேகரன், தேவரசன், அருணாச்சலம் மற்றும் கழக முன்னணியினர், கழக உடன்பிறப்புகள் நேரில் சென்று அவரது உடலுக்கு மரியாதை செலுத்தினார்கள்.*

---



ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட நங்கநல்லூர் நேரு அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், கோவி.செழியன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார்கள். உடன் மண்டல குழு தலைவர் என்.சந்திரன், தொகுக்குழு உறுப்பினர் எம்.கே.இப்ராகிம், மாமன்ற உறுப்பினர்கள் தேவி ஏசுதாஸ், துர்க்காதேவி நடராஜன், வட்டச் செயலாளர்கள் ஏசுதாஸ், ஜெகதீஸ்வரன், உலகநாதன், நடராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



இளைஞர் எழுச்சி நாள் முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகர இளைஞர் அணி திமுக சார்பில் தூய்மை பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், மாநகர அமைப்பாளர் ஜி.துர்காபிரசாத் முன்னிலையில் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் மகா.புவனேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் நிர்வாகிகள் சண்பிரகாஷ், பொன் விஜயன், வழக்கறிஞர் பெ.வினோத் அக்னி மா.ராஜேஷ், இளா.ஸ்ரீதர், முஸ்தபா அஃப்ரிடி, ஜி.சதீஷ்குமார், மகேஷ் ரங்கநாதன், வட்டக் கழக செயலாளர்கள் கு.சேகர், சதீஷ்குமார், கோப , ஆதிகேசவன் , தாஸ் , ராஜலிங்கம் உள்ளனர்.